**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஓசூர்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். :** 11/2016
**அ.சா. :** 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. லட்சுமப்பா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. பாப்பண்ணா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 60 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 22.08.2023**
**(**எதிரி ஆஜரில்லை கு.வி.மு.ச பிரிவு **317** ன் கீழ் மன தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது**).**

**முதல் விசாரணை :**

நான் நல்லகான கொத்தபள்ளியில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியைத் தெரியும். இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி சட்டப்பிரிவு 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிற்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 12.12.2015ம் தேதி இரவு சுமார் 07.45 மணியளவில் வெங்கடேசன் பெல்லப்பா வீட்டிற்க வந்து பெல்லப்பாவை தகாத வார்த்தைகளால் பேசி என் செல்போனை வாங்கும் அளவிற்கு இருக்கிறாயா என்று கையில் வைத்திருந்த இரும்பு ராடால் பெல்லப்பாவின் தலை மீது அடித்து இரத்த காயம் ஏற்படுத்தியதாக தகவல் தெரிந்து சென்று பார்த்தாகவும் பெல்லப்பா தலையில் இரத்த காயத்தோடு இருந்ததாகவும் பெல்லப்பாவை அதே ஊரைச் சேர்ந்த அருண்குமார் ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாகவும் பின்பு பெல்லப்பா சூளகிரி காவல் நிலையத்தில் எதிரிகளை நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தாகவும் போலிசார் விசாரிக்கும்போது வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது தனக்கு எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியளிக்கிறார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1
Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஓசூர்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். :** 11/16

**அ.சா. :** 4

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு . பாலகுமார் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு . பாப்பண்ணா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 25 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 22.08.2023**

**(எதிரி ஆஜரில்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மன தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் கோனேரிப்பள்ளியில் குடியிருந்து சென்ட்ரிங் தொழில் செய்துவருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியைத் தெரியும். கடந்த 12.12.2015 ம் தேதி சுமார் 07.30 மணியளவில் திரு.பெல்லப்பா வீட்டின் அருகில் வெங்கடேசன் வந்து மொபைல் வாங்குவது சம்பந்தமாக பிரச்சினை ஏற்பட்டதாகவும் அதனால் வெங்கடேசன் பெல்லப்பாவை தாக்கிவிட்டதாகவும் தகவல் தெரிந்து சென்று பார்த்தேன். நான் சென்று பார்த்தபோது பெல்லப்பாவிற்கு தலையில் அடி பட்டிருந்தது. பெல்லப்பாவை அருண் என்பவர் ஒசூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். இவ்வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் சாந்தி நகரில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் குறித்த விவரங்கள் நேரடியாக எனக்குத் தெரியாது என்றாலும், கேள்விப்பட்டதன் அடிப்படையில்தான் விவரம் தெரிந்துகொண்டேன் என்றாலும் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் போல் என்னை விசாரித்த காவல் துறையினர் என்னுடைய வாக்குமூலத்தை தட்டச்சு செய்து பதிவுசெய்து கொள்ளவில்லையென்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 – திரு.பெல்லப்பா அவர்களை எனக்கு நன்கு தெரியும் என்ற காரணத்தினால் இவ்வழக்கில் சாட்சியளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1

Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR